அசல் வழக்கு எண்: 187/2022

DEPOSITION OF WITNESS: P.W.1

| | |
|---|---|
| பெயர் | சின்னக்கண்ணியம்மாள் |
| கணவர் பெயர் | கோவிந்தன் |
| வயது | 45 |
| கிராமம் | பெரியவீரப்பட்டு |
| வட்டம் | ஜமுனாமரத்தூர் |
| தொழில் | விவசாயம் |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 11th day of July 2025

<u>முதல்விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். 12.08.2005 ம் தேதியிட்ட வாதி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும் 29.08.2018 1ம் பிரதிவாதிக்கு வாதி எழுதி கொடுத்த கிரைபத்திரம் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆகவும் 09.10.2018 ம் தேதியிட்ட 1428 பசலிக்கான அடங்கல் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** ஆகவும் நீதிமன்ற ஆணையரின் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்ய வேண்டுகிறேன். பிராதுபடி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன். ( பிரதிவாதி வழக்கறிஞர் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலானவை வாதிக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் கொடுக்காது என தனது ஆட்சேபணை தெரிவித்தார். அவரது ஆட்சேபணையுடன் மேற்கண்ட ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |